1996 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்.96, டாக்டர் எஸ்.சுந்தரராஜ். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

96—

புத்தகங்கள் வெளியிட கடன் வழங்குதல்

37835—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்கள் நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் புத்தகங்கள் வெளியிடுவதற்கு தாட்கோ மூலம் கடன் வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆதிதிராவிடர்கள் நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் புத்தகங்கள் வெளியிடுவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆதிதிராவிட மக்களுடைய அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு காலக்கெடு நிர்ணயித்து அந்தக் காலக்கெடுவிற்குள் அடிப்படை வசதிகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கு நிதியுதவி வழங்கி ஆதிதிராவிட மக்களுடைய இரட்சகராகத் திகழ்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இந்த ஆதிதிராவிட மக்கள் குறிப்பாக கிராமப் பகுதிகளில் பல்வேறு பகுதிகளில் இருந்தாலும், அவர்கள் பொருளாதார வசதி இல்லாததன் காரணமாக, நாட்டுப்புறப் பாடல்களில் அவர்கள் தலைசிறந்து விளங்கினாலும், பல்வேறு சிறப்பு வாய்ந்த புத்தகங்களை எழுதுவதற்கு அவர்களுக்குத் திறமை இருந்தும், பொருளாதார வசதி இல்லாத காரணத்தால் இன்றையதினம் அவைகளெல்லாம் தடைபட்டு இருக்கின்றன. இன்றையதினம் பல யுத்திகளைக் கையாண்டு அந்த ஆதிதிராவிட மக்களையும் தொழில் துறையில் தலைவர்களாக்கி, இன்றையதினம்

தொழில் முகவர்களாக ஆக்குகின்ற உயர்ந்த குணம் படைத்த தாழ்த்தப்பட்ட மக்களுடைய இரட்சகராக விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இதுபோன்ற நாட்டுப்புறப் பாடல்களுக்கும் — அதேசமயம் புத்தகங்களை எழுதுவதற்கு திறமை இருந்தும் ஆதிதிராவிட மக்கள் பொருளாதார முன்னேற்றத்தில் தடைபட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, தாட்கோ மூலம் பொருளாதார மேம்பாடு செய்வதற்கு இனிமேலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கி, புத்தகங்களை எழுதுவதற்கு யாராவது முன்வந்தால் அவர்களுக்கு குறைந்தபட்சமாக ஊதியத்தை கொடுக்கின்ற வகையில், தாட்கோ மூலம் திட்டங்கள் மேற்கொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்கள் நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் புத்தகங்கள் வெளியிடுவதற்கான திட்டம் இத்துறையில் ஏதும் இல்லை. தனிப்பட்ட நபரோ அல்லது ஏதேனும் நிறுவனமோ நாட்டுப்புறப் பாடல்களைப் புத்தகமாக வெளியிடுவதற்கு கடன் பெற வேண்டுமானால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடனுதவி பெற்றுக் கொள்ளலாம்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின்மூலம் நிதியுதவி பெறலாம் என்று கூறினார்கள். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஆதிதிராவிட மக்கள் நிதியுதவி பெறுவதற்காக அப்ளிகேஷன் போடுகின்றபோது, வங்கிகள் குறைந்தபட்சம் பல்வேறு லீகல் புரசீஜர்களையெல்லாம் வைத்துக் கொண்டு அவர்களுக்கு அந்தத் தொகையை வழங்குவதற்கு அடிப்படையாக சொத்துக்கள் ஏதேனும் இருக்கிறதா என்று ஆராய்ந்துதான் அவர்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது. தாட்கோ மூலம் வழங்கப்படுகின்ற கடன்கள் அவர்களுக்கென்றே தனியாக டெபாசிட் செய்வதற்கு சொத்துக்கள் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு கடன் வழங்கப்படுகின்ற ஒரு திட்டமாக இருப்பதனால், காலத்திற்கேற்ப புதிய புதிய திட்டங்களை அமல்படுத்துகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், அயல்நாடுகளுக்குச் சென்று காலத்திற்கேற்ப பட்ட மேற்படிப்பு படிப்பதற்கு கடனுதவி அளிப்பது போல, இதுபோன்று புத்தகங்கள் வழங்குவதற்கும் தாட்கோ மூலம் கடன் வழங்குவதற்கு விசேஷ திட்டங்கள் இருக்கிறதா? அதுபற்றி இனிமேல் ஆராயப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

1996 பிப்ரவரி 22]

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ நிறுவனம் ஆதிதிராவிட மக்களுடைய நலத் திட்டங்களை, அதாவது அவர்களுக்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகக் கடனாகவும், மானியமாகவும் வழங்கக்கூடிய ஒரு நிறுவனம். ஆகையினால் மக்களினுடைய நலனில் அக்கறை கொண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் இதுபோன்ற கடன்களை வழங்கிக் கொண்டிருக்கிறோம். புத்தகங்களை எழுதுவது, தனிப்பட்ட நபர் என்கின்ற முறையில் அவர்களுக்கு வழங்குவதற்கு வாய்ப்புகள் இல்லை, சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 97, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

97—

குரும்பர் இனத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்

****73336—திரு. கே. செல்வராஜ்:***

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வாழும் குரும்பர், குரும்பன், குரும்பா, குரும்பர்கள், குரும்பாஸ் என பல பிரிவுகளாக அழைக்கப்படும் குரும்பர் இன மக்களை ஒன்று சேர்த்து பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குரும்பர், குரும்பன், குரும்பர்கள் மற்றும் குரும்பாஸ் இன மக்களிடமிருந்து தங்களின் இனங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கை மனுக்கள் மானிட இயல் வல்லுநர் குழுவிற்கு ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ளது.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் குரும்பர், குரும்பாஸ், குரும்பன், குரும்பர் எனப் பல பெயர்களில் அழைக்கப்படும் மக்களை, இந்தப் பிரிவுகளாக உள்ள மக்களை, சமுதாய மக்களின் பழக்க வழக்கங்கள், திருமணங்கள், உறவு முறைகளில் ஒற்றுமையாக உள்ளதால் தாயுள்ளத்தின்